# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்ற வி தொ முறை பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

C 8109735

1. District மாவட்டம்: Vellore  PS காவல்நிலையம்: Vigilance & Anti-corruption  Year ஆண்டு: 2023  FIR No. மு.த.அ எண்: 01/2023  Date நாள்: 09.03.2023

2. (i) Act சட்டம்: The prevention of corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7(a) of PC (Amendment) Act 2018

(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல்: 14.01.2023  Date to நாள் வரை: 08.03.2023 & 07.03.2023

Time Period நேர அளவு  Time from நேரம் முதல்:  Time to நேரம் வரை:

(b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 09.03.2023  Time நேரம்: 07.00 hrs

(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Volume-I 2023  Time நேரம்: 07.00 hrs & 09.30 hrs

4. Type of Information Written/ Oral தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: Oral

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Taluk office, Gudiyatham Survey Department, about 30kms Northwest

Beat Number முறைக் காவல் எண்  (b) Address: முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District: மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: K.Velu  (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: Kannaiyan

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 66/2023  (d) Nationality நாட்டினம்: Indian  (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue வழங்கப்பட்ட நாள்  Place of Issue வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில்: Agriculture  (g) Address முகவரி: No.28, D.P.palayam, Gudiyatham Taluk, Vellore District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / சந்தேகப்படுகிற / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Vijayakrishnan, Surveyor, Gudiyatham, O/o the Gudiyatham Taluk office, Vellore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவர் முறையீட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......—...... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

KV [signature] 9.3.2023

[signature] 09/03/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.03.2023 @ 10.00 hrs.

Name: பெயர் ......S. VIJAY......
Rank: நிலை ...................... No. எண் ..........
INSPECTOR OF POLICE, VIGILANCE & ANTI-CORRUPTION VELLORE.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் 09.03.2023-ஆம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு. K.வேலு த/பெ கண்ணையன், எண்.28, தட்சணபாதபாளையம் கிராமம், குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த வாய்மொழியான புகாரை கணினியில் தமிழில் டைப் செய்யப்பட்ட புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு: திரு.K.வேலு 66/2023, த/பெ கண்ணையன், எண்.28, தட்சணபாதபாளையம் கிராமம், குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவரது வாக்குமூலம் நாள்:09.03.2023 என் பெயர் வேலு நான் மேற்கண்ட விலாசத்தில் என்னுடைய குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு தமிழில் எழுதவோ படிக்கவோ தெரியாது எனக்கு திருமணமாகி இரண்டு பெண் குழந்தை ஒரு ஆண் குழந்தை பிறந்தது அதில் சாந்தி என்ற மகள் திருமணத்திற்கு பின்னர் கடந்த 2013-ல் இறந்துவிட்டார் யோகநாதன் என் பையன் கல்யாணம் செய்து கொண்டு அவனது குடும்பத்துடன் நாங்கள் அனைவரும் ஒன்றாக வாழ்ந்து வருகிறோம். செல்வி என்ற மற்றொரு மகள் திருமணமாகி தனியாக அவளது குடும்பத்துடன் வசித்து வருகிறாள். எனக்கு சொந்தமாக குடியாத்தம், டி.பி.பாளையத்தில் சுமார் 3 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது அதில் நான், என்னுடைய மனைவி மற்றும் என்னுடைய மகன் அனைவரும் சேர்ந்து விவசாயம் செய்து ஜீவனம் செய்து வருகிறோம். கடந்த ஏப்ரல் மாதம் 2022 ஆம் ஆண்டு நானும் என்னுடைய நிலத்திற்கு பக்கத்தில் உள்ள ஜெயவேல் அவர்களின் மகன்கள் ரமேஷ்பாபு மற்றும் காசி ஆகியோர் பெங்களூரை சேர்ந்த கனகரத்னா என்பவருக்கு சொந்தமான என்னுடைய நிலத்திற்கு பக்கத்தில் உள்ள நிலத்தை வாங்க முடிவு செய்து சொத்தினை வாங்குவது சம்மந்தமாக பேசி சொத்தினை கிரையம் செய்வதற்கு முன்பாக குடியாத்தம் சர்வேயர் விஜயகிருஷ்ணன் என்பவரை அணுகி வாங்க உள்ள சொத்தினை அளவு செய்து காட்ட வேண்டி கேட்டபோது சர்வேயர் விஜயகிருஷ்ணன் அவர்கள் வாங்க உள்ள சொத்து அமைந்துள்ள சர்வே எண்.184 மற்றும் 187 ஆகியவற்றை ஏப்ரல் 2022-ல் நேரில் பார்த்து அளந்து 27.04.2022 தேதியிட்டு கையெழுத்துபோட்ட சர்வே எண்.184 மற்றும் சர்வே எண்.187 இரண்டு சொத்துக்கும் உண்டான வரைபடத்தினை என்னிடம் கொடுத்தார், நான் கடந்த 18.05.2022 அன்று வேலூர் மாவட்டம் குடியாத்தம் தாலுக்கா தட்சணபாதபாளையம் கிராமத்தில் சர்வே எண்.187-ல் உள்ள 3 ஏக்கர் 20 செண்ட் நிலத்தில் 5 செண்ட் கோயில் பொது வழி போக மீதம் உள்ள 3 ஏக்கர் 15 செண்ட் நிலத்தினை கர்நாடக மாநிலம் பெங்களூர் மல்லேஸ்வரம் பகுதியை சேர்ந்த கனகரத்னா என்பவரிடமிருந்து ரூ.5,00,000/-க்கு கிரையம் பேசி குடியாத்தம் ரிஜிஸ்டர் ஆபிஸில் டாக்குமெண்ட் நம்பர். 4507/2022 நாள்.18.05.2022 அன்று என் பெயரில் சொத்தை பதிவு செய்தேன். அன்றைய தினமே எங்க ஊரைசேர்ந்த ஜெயவேல் என்பவர் அவரது பேரன் மணிகண்டன் த/பெ ரமேஷ்பாபு மற்றும் ஜெயவேலுவின் மற்றொரு மகன் காசி ஆகியோர் என் மூலமாக நான் வாங்கிய நிலத்திற்கு பக்கத்தில் சர்வே எண்.184-ல் உள்ள 1 ஏக்கர் 33 செண்ட் நிலத்தினை கனகரத்னா அவர்களிடமிருந்து

விலைக்கு வாங்கி ரெஜிஸ்டர் ஆபிசில் கிரையம் செய்துகொண்டார்கள். அதன்பிறகு நாலு மாசம் கழித்து ரமேஷ்பாபு மற்றும் காசி ஆகியோர் என்னிடம் வந்து நீ முன்நின்று வாங்கி கொடுத்த சொத்தில் நிலத்தின் அளவு கம்மியாக உள்ளது என்று என்னிடம் வாக்குவாதம் செய்தார்கள், பின்னர் நீதானே முன்நின்று நிலத்தை வாங்கி கொடுத்தாய் அதனால் குறைவாக உள்ள இடத்திற்கு உன்டான பணத்தை நீதான் கொடுக்க வேண்டும் என்று வாக்குவாதம் செய்தார்கள். நான் பரதராமி போலீஸ் ஸ்டேசனுக்கு சென்று ரமேஷ்பாபு மற்றும் காசி ஆகியோர் மீது நடடிவக்கை எடுக்கும்படி 15.11.2022 அன்று புகார் மனு கொடுத்தேன், அதற்கு பரதராமி போலீஸ் ஸ்டேசனில் எனக்கு ரசீது கொடுத்து எங்களை அழைத்து விசாரணை செய்து நிலம் சம்மந்தமான பிரச்சனை என்பதால் சர்வேயர் அழைத்து அளந்து பிரச்சனை தீர்த்துக்கொள்ளுமாறு கூறினார்கள். ரமேஷ்பாபு மற்றும் காசி ஆகிய இரண்டுபேரும் என்னிடம், எங்களுக்கு நிலம் நீதான் முன்நின்று வாங்கி கொடுத்த அதனால நீயே பணம் கட்டி எங்க நிலத்தை அளந்து இந்த பிரச்சனை தீர்க்கனும் என்று சொன்னார்கள். அதனால் நானும் இந்த பிரச்சனை தீர்ந்தாபோதும் என முடிவுபன்னி 18.11.2022 அன்று குடியாத்ததில் உள்ள நெட்சென்டர்க்கு சென்று குடியாத்தம் டி.பி.பாளையம் சர்வே எண்.184-க்கு உண்டான நிலத்தை அளவு செய்து ஸ்கெட்ச் கொடுக்க ரு.800/- செலுத்தி செலான் கட்டி ரசீது இரண்டு காப்பி வாங்கிகொண்டு அன்றைய தினமே குடியாத்தம் தாலுக்கா ஆபிஸ் சென்று சர்வேயர் விஜயகிருஷ்ணன் என்பவரை பார்த்து நிலம் அளப்பது சம்மந்தமாக பேசி அதற்கான பணம் செலுத்திய செலான் கட்டிய ரசீதை கொடுத்தேன், அதனை வாங்கி கொண்ட சர்வேயர் விஜயகிருஷ்ணன் என்னிடம் கொஞ்ச நாள் ஆகும் நான் வந்து நிலத்தை அளந்து முடிச்சுதரேன் பணம் செலவாகும் என்று சொன்னார். அதன் பின்னர் சர்வேயர் ரொம்ப நாளா நிலத்தை அளக்க வரவில்லை நான் அது சம்மந்தமாக விஜயகிருஷ்ணன் சர்வேயரை நேரில் பார்த்து நிலத்தை அளந்து கொடுக்க பேசினேன், கடைசியா 2023 ஜனவரி மாசம் 14-ந் தேதி போகி பண்டிகை அன்னிக்கி வந்து சர்வே நெம்பர் 184-க்கான நிலத்தையும் என்னுடைய சர்வே எண்.187-ம் நிலத்தையும் அளந்தார் அப்போது சர்வே நெம்பர் 184-க்கு உரிமையாளரான ரமேஷ்பாபு, அவரின் மகன் மணிகண்டன் மற்றும் காசி ஆகியோர் இருந்தார்கள். அளவு செய்து முடித்த பின்னர் என்னிடம் சர்வே எண்.184-ல் நிலமானது பத்திரத்தில் இருக்கிறமாதிரி 1 ஏக்கர் 33 செண்ட் நிலம் இல்லாமல் 8 செண்ட் குறைவாக இருக்கிறது என்று சொன்னார் அதன்பிறகு சர்வேயர் விஜயகிருஷ்ணன் அவர்களிடம் அளந்ததற்கான ஸ்கெட்ச் எப்ப கொடுப்பிங்க என்று கேட்டேன், அதற்கு அவர் பணம் ரு.15,000/-ம் கொடு ஸ்கெட்ச் கொடுப்பதாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார், அதன்பிறகு நான் தாலுக்கா ஆபீஸ் சென்று சர்வேயர் விஜயகிருஷ்ணன் அவர்களை பார்த்து பலமுறை ஸ்கெட்ச் கேட்டேன் அதற்கு அவர் பணம் கொடுத்தால் ஸ்கெட்ச் தருகிறேன் என்று சொன்னார். 03.03.2023 அன்று சர்வேயர் விஜயகிருஷ்ணன் அவர்களை மீண்டும் சந்தித்து ஸ்கெட்ச் கேட்டதற்கு பணம் ரு.15,000/- கொடுத்தால் ஸ்கெட்ச் கொடுக்கின்றேன் என்று சொன்னார், அதற்கு நான் அய்யா நான் ரொம்ப

கஷ்டத்தில இருக்கிறேன், என்று கேட்டுக்கொண்டேன் அதற்கு அவர் ரூ.15,000/-ம் கொடுத்தால் மட்டுமே ஸ்கெட்ச் கொடுப்பேன் என்றுசொல்லி என்னை அனுப்பிவிட்டார். மீண்டும் 07.03.2023 விஜயகிருஷ்ணன் சர்வேயர் அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்தபோது காசு 15,000/- சொன்னது சொன்னதுதான் மாற்று கருத்துகிடையாது நான் பணம் கேட்டு 4 மாசம் ஆச்சு பணம் ரூ.15,000/- கொடுத்துவிட்டு ஸ்கெட்ச் வாங்கிகொள் என்று திட்டவட்டமாக பணத்தை கேட்டு என்னை அனுப்பிவிட்டார். விஜயகிருஷ்ணன் பணம் கேட்டு பேசியதை நான் என்னுடைய செல்பேனில் பதிவு செய்துவைத்துள்ளேன். குடியாத்தம் சர்வேயர் விஜயகிருஷ்ணன் லஞ்சமாக கேட்கும் பணம் 15,000/-தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கும் விஜயகிருஷ்ணன் சர்வேயர் குடியாத்தம் அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், சர்வே எண்.184, 187-ன் 27.04.2022 நாளிட்டு விஜயகிருஷ்ணன் வழங்கிய ஸ்கெட்ச் நகல், VAO கொடுத்த சர்வே எண்.187-ன் ஸ்கெட்ச் நகல், நாள் 18.11.2022 அன்று சர்வே எண்.184 அளவு செய்ய பணம் கட்டிய செலான் நகல், என்னுடைய சொத்து பத்திரத்தின் நகல் மற்றும் 07.03.2023 அன்று விஜயகிருஷ்ணன் சர்வேயர் என்னிடம் பணம் கேட்டது சம்மந்தமாக குரல் பதிவு செய்யப்பட்ட மெமரி கார்ட்டு ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கின்றேன், என்னுடைய புகாரினை வாய்மொழியாக நான் தெரிவிக்க நீங்கள் அதனை கம்பியூட்டரில் வாக்குமுலமாக டைப் செய்து கொண்டீர்கள். நான் சொன்ன வாக்குமுலத்தை நீங்கள் படிக்க கேட்டேன் சரியாக உள்ளது. Sd/-xxxxx (K.Velu) 9.3.2023.

Sir,

Today (09.03.2023) at 07.00 hrs Tr.K.Velu S/o.Kannaiyan, No.28, D.P.Palayam, Gudiyatham Taluk, Vellore Dist., appeared before me at O/o. the DSP, V&A.C., Vellore and given oral complaint against Tr. Vijayakrishnan Surveyor, Gudiyatham Taluk, Vellore District, regarding demand of bribe from him. His oral complaint was reduced into writing by way of computer Tamil typed statement. Sd/-xxxxxx 09/3/2023 (S.Vijay).

Sir/Madam,

After verifying the antecedents of accused and credibility of the complainant with the concurrence from the DVAC, registered a case in Vellore V&A.C Cr.No.01/2023, U/s.7(a) of the P.C.(Amendment) Act 2018 on 09.03.2023 at 09.30 Hrs. Sd/-xxxxxx 09/3/2023 (S.Vijay) INS/VAC/VLR.

Sir/Madam,

The FIR in original along with the complaint with enclosures was sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

**Enclosures :**

1) Oral Statement of Complaint of Tr.K.Velu, dated: 09.03.2023
2) Attested copy of Survey No.184 and 187 Sketch given the Surveyor Dated 27.4.2022
3) Attested copy of Survey No.187 Sketch given by the VAO
4) Attested copy of e-Chellan paid by Tr. K.Velu dated 18.11.2022
5) Attested copy of Sale Deed Document No.4507/2022 of SR, Gudiyatham
6) SanDisk 16 GD Micro SD Card-1

09/03/2023
(S.VIJAY)
INSPECTOR OF POLICE
V & A.C, VELLORE.